P. Ilankovan.
28/7/90

உ

சிவமயம்

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

மனவமைதியையும் சுபீட்சமான வாழ்வையும்

அளிக்கும்

# அற்புதத் திருப்பதிகங்கள்

★

ஆலயங்களிலும் வழிபாட்டு இடங்களிலும்

கூட்டு வழிபாடாகப் படிக்க உகந்த

## திருமுறைப் பிரார்த்தனைப் பதிகங்கள்

★

சைவ மகளிர் மன்றம்

யாழ்ப்பாணம்.

22 ஜூலை 1990

உ

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்

# ஆசி உரை

சைவ மெய்யன்பர்களே!

இக் காலகட்டத்தில் மனவமைதியையும் சுபீட்சமான வாழ்வையும் வேண்டி நிற்கும் மக்களுக்கு பேருபகாரமாக யாழ்ப்பாணம் சைவமகளிர் மன்றம் அற்புதத் திருப்பதிகங்கள் என்ற அரிய கைந் நூலினை அன்பர்களுக்கு வழங்க முன்வந்திருப்பதைப் பெரிதும் பாராட்டுகிறோம். உண்மையில் இப்பொழுது வேண்டப்படுவது சித்த சுத்தியுடனும், முழு நம்பிக்கையுடனும் ஆற்றப்படும் இறை வழிபாடு ஒன்றேயாகும். இதற்கு இந்நூல் பயன்படும் என்பது எமது துணிபு. சைவ மக்கள் ஆதரவளிப்பர் என்பது திண்ணம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

— ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள்

உ

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதை

# செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின்

# வாழ்த்துரை

*மனிதர்காள் இங்கே வம்மொன்று சொல்லுவேன்*
*கனிதந்தால் கனி உண்ணவும் வல்லீரோ*
*புனிதன் பொற்கழல் ஈசன் எனும்கனி*
*இனிது சாலவும் ஏசற்றவர் கட்கே.*

உலக இயக்கம் மனித சக்திக்கு அப்பாற்பட்டது. இதனையே எமது முன்னோர் இறைவனின் ஆற்றல் என்று போற்றி ''அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்ற நம்பிக்கையை வாழ்வில் கடைப் பிடித்தனர். இந்த நம்பிக்கையை வளர்ப்பதற்கும் மனித சமுதாயத் தில் தீய உணர்வு அகன்று தூய உணர்வு பெருகுவதற்கும் அமைதி யும் சுபீட்சமும் ஏற்படுவதற்கும் எழுந்தவையே திருமுறைப் பாடல் களாகும். திருமுறை ஆசிரியர்கள் மானிடச் சட்டை தாங்கி மனி தர்கள் போல் நடமாடித் திரிந்த போதும் தெய்வத்தோடு ஒப்ப நோக் கும் பெருமையும் சிறப்பும் அற்புத சக்தியும் உடையவர்களாக விளங் கினர். எல்லோரையும் இறைவனிடத்தில் சேர்ப்பிக்கும் சக்தி திரு முறைகளுக்கு உண்டு. தனி மனிதனுடைய நலனிலும் பார்க்க நாட்டு நலனுக்கும் சமூக நலனுக்குமாகப் படைக்கப்பட்டவை இவை. இத னைக் கருத்திற்கொண்டு யாழ். / சைவ மகளிர் மன்றம் தமது நன் முயற்சியாகத் திருமுறைப் பிரார்த்தனையைக் கூட்டு வழிபாடாக ஆங்காங்கு நிகழ்த்த முன்வந்துள்ளமை மிகவும் வரவேற்கத் தக்கது. இந்தக் காலப் பிரார்த்தனைக்கு மிகவும் பொருத்தமான ஒரு சில பதிகங்களைத் தெரிந்து கூட்டு வழிபாட்டு நூலில் இடம்பெறச் செய்துள்ளனர்.

பிரார்த்தனை என்பது பூமியின் ஈர்ப்பு நிலை போன்று ஒலி எழும் பும் இடமெல்லாம் சக்தியைப் பரப்ப வல்லது பிரார்த்தனையே. துயரமும் தொல்லையும் எம்மைத் துரத்துகிறது. ஆனல் பிரார்த்தனை யினல் அதே துயரமும் தொல்லையும் துரத்தப்படுகிறது. இதனல் உள்ளச்சுமை குறைகின்றது. இன்று நாம் துயரங்களைத் தாங்க முடி யாது திணறுகிறோம். ஆகவே எமது சிந்தனை இறைவன் பக்கம் திருப்பப்பட வேண்டிய நிலை வந்துவிட்டது. இதற்கு வாய்ப்பளிக்கும் நன் முயற்சியாக இந்நூல் வெளிவருகிறது. அனைவரும் இதனை வர வேற்று ஆவன செய்து பிரார்த்தனை பண்ணி உய்தியடைவோமாக.

சிவமயம்

# சைவ மகளிர் மன்றம்

## யாழ்ப்பாணம்.

# வேண்டுகோள்

நல்லை திருஞானசம்பந்த ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கமைய நாட்டில் அமைதியும், மக்களுக்கு மனவமைதியும், துயர்களைத் தாங்கும் சக்தியும், உணவும் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுச் சுபீட்சமான வாழ்வும் வேண்டி எமது இடர்களைக் களைந்து எம்மைக் காக்க வல்ல திருமுறைப் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்துப் பதிப்பித்துள்ளோம்.

எல்லா ஆலயங்களிலும், வழிபாட்டு இடங்களிலும், இல்லங்களிலும் தினமும் சித்த சுத்தியுடனும் முழு நம்பிக்கையுடனும் இவ் வற்புதத் திருப்பதிகங்களைக் கூட்டுவழிபாடாக நிகழ்த்திப் பிரார்த்தனை செய்து வந்தால் திருவருளால் எம்மைச் சூழ்ந்துள்ள துயரமும் தொல்லைகளும் நீக்கப்பட்டுவிடும். இப்படியான வழிபாடுகளை ஆலயங்களும் சைவ மக்களும் ஒழுங்குகள் செய்து பயன் அடைவார்களாக.

எம்மை இப்பணியில் ஊக்குவித்த நல்லை ஆதீனகர்த்தர் அவர்கட்கும், துர்க்காதேவி தேவஸ்தானம், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கட்கும் நாம் நன்றியுடையோம்.

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான்--விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

# திருவங்கமாலை

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது

(இத்திருப்பதிகம் மனிதனின் அங்கங்கள் சிவபெருமானை வழிபட்டு, மேல்நிலை அடையும் வழியைக்காண்பித்து, மக்களைவழிப்படுத்துகின்றது)

திருச்சிற்றம்பலம்

தலையே நீவணங்காய் – தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய்.

கண்காள் காண்மின்களோ – கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ.

செவிகாள் கேண்மின்களோ – சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோன் மேனிப்பி ரான்றிற மெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ.

மூக்கே நீமுரலாய் – முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கைம ணாளனை
மூக்கே நீமுரலாய்.

வாயே வாழ்த்துகண்டாய் – மத
யானை யுரிப்போர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை
வாயே வாழ்த்துகண்டாய்.

நெஞ்சே நீநினையாய் – நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைம ணாளனை
நெஞ்சே நீநினையாய்.

கைகாள் கூப்பித்தொழீர் — கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர்.

ஆக்கை யாற்பயனென் — னரன்
கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றியென் னாதவில்
ஆக்கை யாற்பயனென்.

கால்க ளாற்பயனென் — கறைக்
கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்க ளாற்பயனென்.

உற்று ராருளரோ — வுயிர்
கொண்டு போம்பொழுது
குற்று லத்துறை கூத்தனல் லானமக்
குற்று ராருளரோ.

இறுமாந் திருப்பன்கொலோ — வீசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று*
இறுமாந் திருப்பன்கொலோ.

தேடிக் கண்டுகொண்டேன் — றிரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன்.

திருச்சிற்றம்பலம்

---

*சென்றங்கு — என்றும் பாடம்.

# கோளறு திருப்பதிகம்

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

(திருவருள் நெறியில் செல்லும் சிவனடியார்களை நாள்களுங் கோள்களும் ஒன்றுஞ் செய்யா. அவை நல்லனவே செய்யும். இறைவன் திருவடித் துணையுண்டு என்பதை வலியுறுத்துகின்றது.)

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்

கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
 கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல வவைநல்ல நல்ல
 அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டனெந்தை மடவாள்த னோடும்
 விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
 உளமே புகுந்த வதனால்
வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னு
 மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல வவைநல்ல நல்ல
 அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
 மடவாட னோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
 உளமே புகுந்த வதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
 கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல வவைநல்ல நல்ல
 அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன்மங்கை யொருபாக மாக
 விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பும் முடிமே லணிந்தென்
 உளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
 வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல வவைநல்ல நல்ல
 அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
 மடவாட னோடு முடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
 உளமே புகுந்த வதனால்

ஏழ்கடல் சூழிலங்கை யரையன்ற னோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொ னெங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரைவந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொன் மாலையோது மடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்

# திருநெடுங்களம் திருப்பதிகம்

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

(எமக்கு வரும் இடர்களைக் களைந்து இன்பங்கள் இயைக்கும் தன்மை மிக்கது இத் திருப்பதிகம்)

திருச்சிற்றம்பலம்

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றம்ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களமே யவனே 1

கனைத்தெழுந்த வெண்திரைசூழ் கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடல்ஆடல் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய் நெடுங்களமே யவனே. 2

நின்னடியே வழிபடுவான் நிமலாநினைக் கருத
என்னடியான் உயிரைவவ்வேல் என்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 3

மலைபுரிந்த மன்னவன்தன் மகளையோர்பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கும் அவிர்சடையா ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின்றாள் நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய் நெடுங்களமே யவனே 4

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா அன்பினோடுந் தலைவநின்தாள் நிழற்கீழ்
நீங்கி நில்லார் இடர்களையாய் நெடுங்களமே யவனே 5

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவன் அடியிணையே பரவும்
திருத்தர்கீதர் இடர்களையாய் நெடுங்களமே யவனே 6

கூறுகொண்டாய் மூன்றுமொன்றுக் கூட்டியோர்வெங்
[கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென் றெம்பெருமா னணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்களமே யவனே 7

குன்றின்உச்சி மேல்விளங்குங் கொடிமதில்சூழ் இலங்கை
அன்றிநின்ற அரக்கர்கோனை யருவரைக்கீழ் அடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியா லேத்தீயிராப் பகலும்
நின்றுநைவார் இடர்களையாய் நெடுங்களமே யவனே 8

வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கியநான் முகனும்
சூழவெங்கும் நேடஆங்கோர் சோதியுளா கிநின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப்பொன்
[ னடியின்
நீழல்வாழ்வார் இடர்களையாய் நெடுங்களமே யவனே 9

வெஞ்சொல்தஞ்சொல் லாக்கிநின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந் தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திரநின் அடியே
நெஞ்சில்வைப்பார் இடர்களையாய் நெடுங்களமே யவனே 10

நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழும் மாமறுகிற் சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம்ப றையுமே 11

திருச்சிற்றம்பலம்.

# மறுமாற்றத் திருத்தாண்டகம்

**திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது**

(சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றவர்கள் படையுடையவர்கட்குப் பணியத் தேவையில்லை என்பதை வலியுறுத்துகின்றது.)

திருச்சிற்றம்பலம்

நாமார்க்குங் குடியல்லோ நமனை யஞ்சோ
நரகத்தி லிடர்ப்படோ நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோ
மின்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளா வாளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

அகலிடமே யிடமாக வூர்க டோறு
மட்டுண்பா ரிட்டுண்பார் விலக்கா ரையம்
புகலிடமா மம்பலங்கள் பூமி தேவி
யுடன்கிடந்தாற் புரட்டாள்பொய் யன்று மெய்யே
இகலுடைய விடையுடையா னேன்று கொண்டா
னினியேதுங் குறைவிலோ மிடர்க டீர்ந்தோம்
துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லுஞ்
சொற்கேட்கக் கடவோமோ துரிசற் றோமே.

வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோ
மாதேவா மாதேவா வென்று வாழ்த்தி
நீராண்ட புரோதாய மாடப் பெற்றோ
நீறணியுங் கோலமே நிகழப் பெற்றோம்
காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்
கன்மனமே நன்மனமாக் கரையப் பெற்றோம்
பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணிகேட்கக் கடவோமோ பற்றற் றோமே.

உறவாவா ருருத்திரபல் கணத்தி னோர்க
ளுடுப்பனகோ வணத்தொடுகீ ளுளவா மன்றே
செறுவாருஞ் செறமாட்டார் தீமை தானு
நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்லோம்
நறவார்பொன் னிதழிநறுந் தாரோன் சீரார்
நமச்சிவா யச்சொல்ல வல்லோ நாவால்
சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட
சுடர்நயனச் சோதியையே தொடர்வுற் றோமே.

என்றுநா மியாவர்க்கு மிடைவோ மல்லோ
மிருநிலத்தி லெமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோஞ்
சிவபெருமான் றிருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறைவுடையோ மல்லோ மன்றே
யுறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை| யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே.

மூவுருவின் முதலுருவா யிருநான் கான
மூர்த்தியே யென்றுமுப் பத்து மூவர்
தேவர்களு மிக்கோருஞ் சிறந்து வாழ்த்துஞ்
செம்பவளத் திருமேனிச் சிவனே யென்னும்
நாவுடையார் நமையாள வுடையா ரன்றே
நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான
காவலரே யேவி விடுத்தா ரேனுங்
கடவமலோங் கடுமையொடு களவற் றோமே.

நிற்பனவு நடப்பனவு நிலனு நீரு
நெருப்பினொடு காற்றாகி நெடுவா னாகி
அற்பமொடு பெருமையுமா யருமை யாகி
யன்புடையார்க் கெளிமையதா யளக்க லாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானு மியானு
மாகின்ற தன்மையனை நன்மை யோடும்
பொற்புடைய பேசக் கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமோ பிழையற் றோமே.

ஈசனையெவ் வுலகினுக்கு மிறைவன் றன்னை
    யிமையவர்தம் பெருமானை யெரியாய் மிக்க
தேசனைச் செம்மேனி வெண்ணீற் றானைச்
    சிலம்பரையன் பொற்பாவை நலஞ்செய் கின்ற
நேசனை நித்தலு நினையப் பெற்றோ
    நின்றுண்பா ரெம்மை நினையச் சொன்ன
வாசக மெல்லா மறந்தோ மன்றே
    வந்தீரார் மன்னவனா வான்றா னாரே.

சடையுடையான் சங்கக் குழையோர் காதன்
    சாம்பலும் பாம்பு மணிந்த மேனி
விடையுடையான் வேங்கை யதண்மே லாடை
    வெள்ளிபோற் புள்ளியுழை மான்றோல் சார்ந்த
உடையுடையா னம்மை யுடையான் கண்டீ
    ரும்மோடு மற்று முளராய் நின்ற
படையுடையான பணிகேட்கும் பணியோ மல்லோம்
    பாசமற வீசும் படியோ நாமே

நாவார நம்பனையே பாடப் பெற்றோ
    நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவாவென் றெமையாள்வா னமரர் நாத
    னயனொடுமாற் கறிவரிய வனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
    சேர்ந்திருந்தான் றென்றிசைக்கோன றானே வந்து
கோவாடிக் குற்றேவல செய்கென் றாலுங்
    குணமாகக் கொள்ளோமெண் குணத்து ளோமே.

திருச்சிற்றம்பலம்

# திருவதிகை வீரட்டானம் திருப்பதிகம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது

(வரங்கள் கொடுத்து அருள்செய்யும் இறைவனுடைய அடியவர்கள் எவற்றிற்கும் அஞ்சவேண்டியது இல்லை, அவர்களை எதுவும் அஞ்சச் செய்வதும் இல்லை என்பதை வலியுறுத்துகின்றது.)

திருச்சிற்றம்பலம்

*சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா*
*[மணியும்*
*வண்ண வுரிவை யுடையும் வளரும் பவள நிறமும்*
*அண்ண லரண்முர ணேறு மகலம் வளாய வரவும்*
*திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்*
*அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை*

*பூண்டதொர் கேழ லெயிறும் பொன்றிக ழாமை புரள*
*நீண்டதிண் டோள்வலஞ் சூழ்ந்து நிலாக்கதிர் போலவெண்*
*[ணூலும்*
*காண்டகு புள்ளின் சிறகுங் கலந்தகட் டங்கக் கொடியும்*
*ஈண்டு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்*
*அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை*

*ஒத்த வடத்திள நாக முருத்திர பட்ட மிரண்டும்*
*முத்து வடக்கண் டிகையு முளைத்தெழு முவிலை வேலும்*
*சித்த வடமு மதிகைச் சேணுயர் வீரட்டஞ் சூழ்ந்து*
*தத்துங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்*
*அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை.*

*மடமான் மறிபொற் கலையு மழுபபாம் பொருகையில் வீணை*
*குடமால் வரையதிண் டோளுங் குனிசிலைக் கூத்தின்*
*[பயில்வும்*
*இடமா றழுவிய பாக மிருநில னேற்ற சுவடும்*
*தடமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்*
*அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை.*

பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை.

கரந்தன கொள்ளி விளக்குங் கறங்கு துடியின் முழக்கும்
பரந்த பதினெண் கணமும் பயின்றறி யாதன பாட்டும்
அரங்கிடை நூலறி வாள ரறியப்ப டாததொர் கூத்தும்
நிரந்த கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை.

கொலைவரி வேங்கை யதளுங் குலவோ டிலங்குபொற் றோடும்
விலைபெறு சங்கக் குழையும் விலையில் கபாலக் கலனும்
மலைமகள் கைக்கொண்ட மார்பு மணியார்ந் திலங்கு மிடறும்
உலவு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை.

ஆடல் புரிந்த நிலையு மரையி லசைத்த வரவும்
பாடல் பயின்றபல் பூதம் பல்லா யிரங்கொள் கருவி
நாடற் கரியதொர் கூத்து நன்குயர் வீரட்டஞ் சூழ்ந்து
ஓடுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை.

சூழு மரவத் துகிலுந் துகில்கிழி கோவணக் கீளும்
யாழின் மொழியவ ளஞ்ச வஞ்சா தருவரை போன்ற
வேழ முரித்த நிலையும் விரிபொழில் வீரட்டஞ் சூழ்ந்து
தாழுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை.

நரம்பெழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை
உரங்களெல் லாங்கொண் டெடுத்தா னொன்பது மொன்று [மலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான் வளர்பொழில் [வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை.

திருச்சிற்றம்பலம்.

# திருஆலவாய் திருப்பதிகம்

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

(தஞ்சம் என்று சரண்புகுந்தோரை அஞ்சல் என்று அடைக்கலம் கொடுப்பார், செய்த தீவினை, தீவினை செய்தவர்களையே சாரும் என்பதை வலியுறுத்துகின்றது.)

திருச்சிற்றம்பலம்

செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேஅஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே.

சித்த னேதிரு ஆலவாய் மேவிய
அத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எத்த ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பத்திமன் தென்னன் பாண்டியற் காகவே

தக்கன் வேள்வி தகர்த்தருள் ஆலவாய்ச்
சொக்க னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எக்க ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பக்க மேசென்று பாண்டியற் காகவே.

சிட்ட னேதிரு ஆலவாய் மேவிய
அட்ட மூர்த்திய னேயஞ்ச லென்றருள்
துட்ட ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பட்டி மன்தென்னன் பாண்டியற் காகவே.

நண்ண லார்புரம் மூன்றெரி ஆலவாய்
அண்ண லேயஞ்ச லென்றருள் செய்யெனை
எண்ணி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பண்ணி யல்தமிழ்ப் பாண்டியற் காகவே.

தஞ்ச மென்றுன் சரண்புகுந் தேனையும்
அஞ்ச லென்றருள் ஆலவா யண்ணலே
வஞ்சஞ் செய்தம ணர்கொளு வுஞ்சுடர்
பஞ்ச வனதென்னன் பாண்டியற் காகவே.

செங்கண் வெள்விடை யாய்திரு ஆலவாய்
அங்க ணாஅஞ்ச லென்றருள் செய்யெனக்
கங்கு லார்அமண் கைய ரீடுங்கனல்
பங்கமில் தென்னன் பாண்டியற் காகவே.

தூர்த்தன் வீரந் தொலைத்தருள் ஆலவாய்
ஆத்த னேயஞ்ச லென்றருள் செய்யென
ஏத்தி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பார்த்தி வன்தென்னன பாண்டியற் காகவே

தாவி னான்அயன் தானறி யாவகை
மேவி னாய்திரு ஆலவா யாயருள்
தூவி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பாவி னான்தென்னன் பாண்டியற் காகவே.

எண்டி சைக்கெழில் ஆலவாய் மேவிய
அண்ட னேயஞ்ச லென்றருள் செய்யெனக்
குண்ட ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பண்டிமன் தென்னன் பாண்டியற் காகவே

அப்பன் ஆலவா யாதி யருளினால்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்தன் உரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே.

திருச்சிற்றம்பலம்

# திருவாரூர் திருப்பதிகம்

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

(மூளாத் தீ போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி இருக்கும் அடியார்கள் தங்கள் அல்லல் சொல்லித் துன்பங்களை நீக்குமாறு வேண்டும் திருப்பதிகம்)

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.

விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்த தில்லை கொத்தை ஆக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே.

அன்றில் முட்டா தடையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே
கன்று முட்டி உண்ணச் சுரந்த காலி யவைபோல
என்றும் முட்டாப் பாடும் அடியார் தங்கண் காணாது
குன்றில் முட்டிக் குழியில் விழுந்தால் வாழ்ந்து போதீரே.

துருத்தி உறைவீர் பழனம் பதியாச் சோற்றுத் துறைஆள் [வீர்
இருக்கை திருவா ரூரே உடையீர் மனமே எனவேண்டா
அருத்தி உடைய அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமை பணித்தால் வாழ்ந்து போதீரே.

செந்தண் பவளந் திகழுஞ் சோலை இதுவோ திருவாரூர்
எந்தம் அடிகேள் இதுவே ஆமா றுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் அடியார் தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ என்றால் வாழ்ந்து போதீரே

திணைத்தாள் அன்ன செங்கால் நாரை சேருந் திருவாரூர்ப்
புணைத்தார் கொன்றைப் பொன்போல் மாலைப் புரிபுன் சடை
[யீரே
தனத்தால் இன்றித் தாந்தாம் மெலிந்து தங்கண் காணாது
மனத்தால் வாடி அடியார் இருந்தால் வாழ்ந்து போதீரே,

ஆயம் பேடை அடையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே
ஏயெம் பெருமான் இதுவே ஆமா றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே.

கழியாய்க் கடலாய்க கலனாய் நிலனாய்க் கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை இகழா தேத்துவோம்
பழிதான ஆவ தறியீர் அடிகேள் பாடும பத்தரோம்
வழிதான காணா தலமந் திருந்தால் வாழ்ந்து போதீரே

பேயோ டேனும் பிறிவொன் றின்னா தென்பர் பிறரெல்
[லாம்
காய்தான் வேண்டிற் கனிதான் அன்றோ கருதிக் கொண்டக்
[கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும் உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.

செருந்தீ செம்பொன் மலருஞ் சோலை இதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டா னம்மே இடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றுங் கிடந்தும் உம்மை இகழா தேத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கொன் றுரைத்தால் வாழ்ந்து போதீரே.

காரூர் கண்டத் தெண்டோள் முக்கண் கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே அடிப்பே ராரூரன்
பாரூர் அறிய என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே.

திருச்சிற்றம்பலம்.

# திருநள்ளாறு திருப்பதிகம்

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

(கோள்களில் வலிமை மிக்க சனீஸ்வரனுடைய தாக்கம் குறைவதற்கும் தோஷ நிவிர்த்தி ஏற்படுவதற்குமாகப் பாடப்படும் திருப்பதிகம்)

திருச்சிற்றம்பலம்

ஏடுமலி கொன்றையர விந்துஇள வன்னி
மாடவல செஞ்சடையெம் மைந்தனிட மென்பர்
கோடுமலி ஞாழல்குர வேறுசுர புன்னை
நாடுமலி வாசமது வீசியநள் ளாறே.

விண்ணியல் பிறைப்பிள வறைப்புனல் முடித்த
புண்ணிய னிருக்குமிட மென்பர்புவி தன்மேல்
பண்ணிய நடத்தொடிசை பாடும்அடி யார்கள்
நண்ணிய மனத்தின்வழி பாடுசெயநள் ளாறே

விளங்கிழை மடந்தைமலை மங்கையொரு பாகத்
துளங்கொள இருத்திய வொருத்தனிட மென்பர்
வளங்கெழுவு தீபமொடு தூபம்மலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய்நள் ளாறே.

கொக்கரவர் கூன்மதியர் கோபர்திரு மேனிச்
செக்கரவர் சேருமிடம் மென்பர்தடம் மூழ்கிப்
புக்கரவர் விஞ்சையரும் விண்ணவரும் நண்ணி
நக்கரவர் நாமம்நினை வெய்தியநள் ளாறே.

நெஞ்சமிது கண்டுகொ ளுனக்கென நினைந்தார்
வஞ்சம தறுத்தருளும் மற்றவனை வானோர்
அஞ்சமுது காகியவர் கைதொழ எழுந்த
நஞ்சமுது செய்தவ னிருப்பிடம்நள் ளாறே.

பாலனடி பேணவவ னுருயிர் குறைக்குங்
காலனுடன் மாளமு னுதைத்தஅர னூராம்
கோலமலர் நீர்க்குட மெடுத்துமறை யாளர்
நாலின்வழி நின்றுதொழில் பேணியநள் ளாறே.

நீதியர் நெடுந்தகையர் நீள்மலையர் பாவை
பாதியர் பராபரர் பரம்பர ரிருக்கை
வேதியர்கள் வேள்வியொழி யாதுமறை நாளும்
ஓதியரன் நாமமும் உணர்த்திடும்நள் ளாறே.

கடுத்துவல் லரக்கன்முன் நெருகநிவரை தன்னை
எடுத்தவன் முடித்தலைகள் பத்தும்மிகு தோளும்
அடர்த்தவர் தமக்கிடம தென்பரளி பாட
நடத்தகல வைத்திரள்கள் வைகியநள் ளாறே.

உயர்ந்தவ னுருக்கொடு திரிந்துலக மெல்லாம்
பயந்தவன் நீணைப்பரிய பண்பனிட மென்பர்
வியந்தமரர் மெச்சமலர் மல்குபொழி லெங்கும்
நயந்தரும வேதவொலி யார்திருநள் ளாறே

சிந்தைதிரு கற்சமணர் தேரர்தவ மென்னும்
பந்தனை யறுத்தருளு கின்றபர மன்னூர்
மந்தமுழ வந்தரு விழாவொலியும் வேதச்
சந்தம்விர விப்பொழில் முழங்கியநள் ளாறே.

ஆடலர வார்சடையன் ஆயிழைதன் னோடும்
நாடுமலி வெய்திட இருந்தவன்நள் ளாற்றை
மாடம்மலி காழிவளர் பந்தனது செஞ்சொல்
பாடலுடை யாரையடை யாபழிகள் நோயே.

திருச்சிற்றம்பலம்

# திருக்கோளிலி திருப்பதிகம்

**சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது**

(உணவும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் அவை கிடைக்கும் இடங்களில் இருந்து பெற்றுத்தர ஆட்கள் வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கும் திருப்பதிகம்)

**திருச்சிற்றம்பலம்**

*நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்*
*வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே*
*கோளிலி எம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப்*
*[பெற்றேன்*
*ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே.*

*வண்டம ருங்குழலாள் உமை நங்கையோர் பங்குடையாய்*
*விண்டவர் தம்புரமூன் றெரி செய்தஎம் வேதியனே*
*தெண்திரை நீர்வயல்சூழ் திருக் கோளிலி எம்பெருமான்*
*அண்டம தாயவனே அவை அட்டித் தரப்பணியே.*

*பாதியோர் பெண்ணைவைத்தாய் பட ருஞ்சடைக்*
*[கங்கைவைத்தாய்*
*மாதர்நல் லார்வருத்தம் அது நீயும் அறிதியன்றே*
*கோதில் பொழில்புடைசூழ் குண்டை யூர்ச்சில நெல்லுப்*
*[பெற்றேன்*
*ஆதியே அற்புதனே அவை அட்டித் தரப்பணியே.*

*சொல்லுவ தென்னுனைநான் தொண்டை வாய்உமை*
*[நங்கையைநீ*
*புல்கி இடத்தில்வைத்தாய்க் கொரு பூசல்செய் தார்உளரோ*
*கொல்லை வளம்புறவிற் குண்டை யூர்ச்சில நெல்லுப்*
*[பெற்றேன்*
*அல்லல் களைந்தடியேற் கவை அட்டித் தரப்பணியே.*

முல்லை முறுவல்உமை ஒரு பங்குடை முக்கணனே
பல்உயர் வெண்டலையிற் பலி கொண்டுழல் பாசுபதா
கொல்லை வளம்புறவில் திருக் கோளிலி எம்பெருமான்
அல்லல் களைந்தடியேற் கவை அட்டித் தரப்பணியே.

குரவம ருங்குழலாள் உமை நங்கைஒர் பங்குடையாய்
பரவை பசிவருத்தம் அது நீயும் அறிதியன்றே
குரவம ரும்பொழில்சூழ் குண்டை யூர்ச்சில நெல்லுப்
[பெற்றேன்
அரவம் அசைத்தவனே அவை அட்டித் தரப்பணியே

எம்பெரு மான்நினையே நினைந் தேத்துவன் எப்பொழுதும்
வம்பம ருங்குழலாள் ஒரு பாகம் அமர்ந்தவனே
செம்பொனின் மாளிகைசூழ் திருக் கோளிலி எம்பெருமான்
அன்பது வாயடியேற் கவை அட்டித் தரப்பணியே.

அரக்கன் முடிகரங்கள் அடர்த் திட்டஎம் ஆதிப்பிரான்
பரக்கும் அரவல்குலாள் பர வையவள் வாடுகின்றாள்
குரக்கினங் கள்குதிகொள் குண்டை யூர்ச்சில நெல்லுப்
[பெற்றேன்
இரக்கம தாயடியேற் கவை அட்டித் தரப்பணியே.

பண்டைய மால்பிரமன் பறந் தும்மிடந் தும்அயர்ந்தும்
கண்டில ராமவர்கள் கழல் காண்பரி தாயபிரான்
தெண்திரை நீர்வயல்சூழ் திருக் கோளிலி எம்பெருமான்
அண்டம தாயவனே அவை அட்டித் தரப்பணியே.

கொல்லை வளம்புறவில் திருக் கோளிலி மேயவனை
நல்லவர் தாம்பரவுந் திரு நாவல வூரனவன்
நெல்லிட ஆட்கள்வேண்டி நினைந் தேத்திய பத்தும்வல்லார்
அல்லல் களைந்துலகின் அண்டர் வானுலக காள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கழுமலம் திருப்பதிகம்

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

(மண்ணில் நல்ல வண்ணம் மங்கலமாய் வாழத் தினமும் ஓதி வழிபடும் திருப்பதிகம்)

திருச்சிற்றம்பலம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே.

தொண்டணை செய்தொழில் துயரறுத் துய்யலாம்
வண்டணை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண்துணை நெற்றியான் கழுமல வளநகர்ப்
பெண்துணை யாகவோர் பெருந்தகை யிருந்ததே

அயர்வுளோம் என்றுநீ அசைவொழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை யவளொடுங்
கயல்வயல் குதிகொளுங் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெயப் பெருந்தகை யிருந்ததே.

அடைவிலோம் என்றுநீ அயர்வொழி நெஞ்சமே
விடையமர் கொடியினான் விண்ணவர் தொழுதெழுங்
கடையுயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடைநடை யவளொடும் பெருந்தகை யிருந்ததே

மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபல
கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப் பேரல்குல் திருந்திழை யவளொடும்
பெற்றெனை யாளுடைப் பெருந்தகை யிருந்ததே.

குறைவளை வதுமொழி குறைவொழி நெஞ்சமே
நிறைவளை முன்கையாள் நேரிழை யவளொடுங்
கறைவளர் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை யிருந்ததே.

அரக்கனார் அருவரை யெடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடியாழ் பாடவே
கருக்குவாள் அருள்செய்தான் கழுமல வளநகர்ப்
பெருக்குநீ ரவளொடும் பெருந்தகை யிருந்ததே

நெடியவன் பிரமனும் நினைப்பரி தாயவர்
அடியொடு முடியறி யாஅழல் உருவினன்
கடிகமழ் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிடிநடை யவளொடும் பெருந்தகை யிருந்ததே.

தாருறு தட்டுடைச் சமணர்சாக் கியர்கள்தம்
ஆருறு சொற்களைந் தடியிணை யடைந்துய்ம்மின்
காருறு பொழில்வளர் கழுமல வளநகர்ப்
பேரறத் தாளொடும் பெருந்தகை யிருந்ததே.

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோ டிருந்தஎம் பிரான்றனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன் செந்தமிழ்
விரும்புவா ரவர்கள்போய் விண்ணுல காள்வரே.

ருச்சிற்றம்பலம்

# திருவாசகம் – திருவுந்தியார்

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது

(தீவினையால் வந்த கேடு நீங்க, இறைவன் புகழைப் பாடி, பகையை வென்று பரமனருள் பெற்று உய்ய வழிகாட்டும் இத் திருப்பதிகம்)

திருச்சிற்றம்பலம்

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற.

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற.

தச்சு விடுத்தலுந் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற.

உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே உந்தீபற
இளமுலை பங்கனென் றுந்தீபற.

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி உந்தீபற
உருத்திர நாதனுக்கு உந்தீபற

ஆவா திருமால் அவிப்பாகங் கொண்டன்று
சாவா திருந்தானென் றுந்தீபற
சதுர்முகன் தாதையென் றுந்தீபற.

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென் றுந்தீபற
கலங்கிற்று வேள்வியென் றுந்தீபற.

பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேயடி உந்தீபற
பணைமுலை பாகனுக்கு உந்தீபற.

புரந்தரா னார்ஒரு பூங்குயி லாகி
மரந்தனி லேறினார் உந்தீபற
வானவர் கோன்என்றே உந்தீபற.

வெஞ்சின வேள்வி வியாத்திர னார்தலை
துஞ்சின வாபாடி உந்தீபற
தொடர்ந்த பிறப்பற உந்தீபற.

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீபற
கொங்கை குலுங்கநின் றுந்தீபற.

உண்ணப் புகுந்த பகனொளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற
கருக்கெட நாமெலாம் உந்தீபற.

நாமகள் நாசிசிரம்பிர மன்படச்
சோமன் முகனெரித் துந்தீபற
தொல்லை வினைகெட உந்தீபற.

நான்மறை யோனும் அகத்திய மான்படப்
போம்வழி தேடுமா றுந்தீபற
புரந்தரன் வேள்வியில் உந்தீபற.

சூரியனார் தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற
மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற.

தக்கனு ரன்றே தலையிழந்தார் தக்கன்
மக்களைச் சூழநின் றுந்தீபற
மடிந்தது வேள்வியென் றுந்தீபற.

பாலக னார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீபற
குமரன்றன் தாதைக்கே உந்தீபற.

நல்ல மலரின்மேல் நான்முக னார்தலை
ஒல்லை யரிந்ததென் றுந்தீபற
உகிரால் அரிந்ததென் றுந்தீபற,

தேரை நிறுத்தி மலையெடுத் தான்சிரம்
ஈரைந்தும் இற்றவா றுந்தீபற
இருபதும் இற்றதென் றுந்தீபற.

திருச்சிற்றம்பலம்

# தென்முகக் கடவுள் (தெட்சணாமூர்த்தி) துதி

(வியாழ பகவானுடைய அனுக்கிரகத்தைப் பெறவும், அவருடைய பிரீதியை வேண்டியும் பாடப்படும் பாடல்)

திருச்சிற்றம்பலம்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை ஆறங்கமுதல் [கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் [மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி [இருந்து காட்டி
சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்து [பவத் தொடக்கை வெல்வாம்.

## திருவாசகம்—8-ம் திருமுறை

### மாணிக்கவாசக சுவாமிகள்

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்டோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா—9-ம் திருமுறை

### கங்கைகொண்ட சோளேச்சரம்

### கருவூர்த்தேவர்

அன்னமாய் விசும்பு பறந்(து) அயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்று(ம்)நான் மறக்கேன்;

முன்னம்மா லறியா ஒருவனும் இருவா!
முக்கணு நாற்பெருந் தடந்தோள்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!

## திருப்பல்லாண்டு—9-ந் திருமுறை

### கோயில்

### சேந்தனார்

மன்னுக தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம் — 10-ம் திருமுறை

### திருமூலர்

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே.

## திருமுருகாற்றுப்படை — 11-ம் திருமுறை

### நக்கீரர்

அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும் —நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்
முருகா என்(று) ஓதுவார் முன்.

## திருத்தொண்டர் புராணம் — 12-ம் திருமுறை

சேக்கிழார் நாயனுர்

*சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும்*
*இனிஎதிர் காலத்தின் சிறப்பும்*
*இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனுல்*
*எற்றைக்குந் திருவரு ளுடை யேம்*
*நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்*
*நற்றமிழ் வேந்தனும் உய்ந்து*
*வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்*
*மேன்மையும் படைத்தனம் என்பார்.*

## திருப்புகழ்

அருணகிரிநாதர்

*இறவாமல் பிறவாமல்*
*எனையாள்சற் குருவாகிப்*
*பிறவாகித் திரமான*
*பெருவாழ்வைத் தருவாயே*
*குறமாதைப் புணர்வோனே*
*குகனேசொற் குமரேசா*
*கறையானைக் கிளையோனே*
*கதிர்காமப் பெருமாளே.*

## வாழ்த்து

*வான்முகில் வழா துபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்*
*கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க*
*நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க*
*மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.*

திருச்சிற்றம்பலம்

வெளியீடு;

**சைவ மகளிர் மன்றம்**

**சிவகுருநாதர் வீதி.**

**யாழ்ப்பாணம்.**

*கிடைக்கும் இடங்கள்:*

1. **சைவ மகளிர் மன்றம்**
2. **நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**

ஸ்ரீலங்கா அச்சகம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 24175